2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு சென்னை அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-45

(ஓ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. கே.என். நேரு] [2010 மே 14

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

General

"That the Bill be referred to the Select Committee of the House"

என்னும் திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவை அ.தி.மு.க.-வின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறேன். ஏனென்றால், வாகன வரி 8 சதவீதம் என்றுள்ளதை, ரூ.10 இலட்சம் மதிப்புள்ள வாகனங்களுக்கு 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் என அறிவிக்க சட்டத்தைக் கொண்டு வரவிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன்.

சாதாரண, நடுத்தர மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய வாகனங்கள் ஏறத்தாழ ரூ.10 இலட்சம் ரூபாய்க்கு மேல்தான் இருக்கிறது. ரூ.10 இலட்சத்திற்குக் குறைவாக இருக்கிற வாகனங்கள் அவ்வளவு சரியாக இருப்பதில்லை. எனவே, ரூ.10 இலட்சத்திற்கு மேலுள்ள அந்த வாகனங்களுக்கு 15 சதவீதம் என்று உயர்த்தவிருப்பதாகக் கூறுகிறீர்கள். அப்படி 15 சதவீதம் என ஆக்கப்பட்டால், கண்டிப்பாக நடுத்தர மக்கள் பாதிக்கக்கூடிய

@ 10–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 மே 14] [திரு. ஏ.கே. போஸ்]

சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதை Select Committee-க்கு அனுப்பி, அங்கே பரிசீலனை செய்து ஆலோசனை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் வாகனப் பெருக்கம் என்பது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் வாகனங்கள் பதிவாகின்றன. இப்பொழுது தமிழ்நாட்டினுடைய மொத்த வாகனங்களுடைய எண்ணிக்கை ஒரு கோடியே 20 இலட்சம். ஒரு வாகனம் வைத்திருப்பவர்கள், இரண்டு வாகனங்கள்; இரண்டு வாகனங்கள் வைத்திருப்பவர்கள், மூன்று வாகனங்கள் என்று வாகனங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. அதை ஏதாவது ஒரு வகையிலே கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கிறது. காரணம், இருக்கிற சாலைகள் அப்படியே இருக்கின்றன. ஆனால், வாகனங்கள் மட்டும் மிகுதியாக வருகின்றபோது நாம் அதைச் சரிசெய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

குறிப்பாக, இதை எடுத்துக்கொண்டால், ஏதோ நாம்தான் அதிகமான வரி விதித்திருக்கிறோம் என்று நீங்கள் கருதாதீர்கள். வாகனத்தினுடைய மொத்த மதிப்பில் 5 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் உள்ள வாகனங்களுக்கு 12 சதவீதமும், வாகனத்தின் மொத்த மதிப்பில் ரூ.5 இலட்சத்திற்கு மேலும் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள வாகனங்களுக்கு 13 சதவீதமும், வாகனத்தின் மொத்த மதிப்பில் ரூ.10 இலட்சத்திற்கு மேல் இருக்கின்ற வாகனங்களுக்கு 16 சதவீதமும் கர்நாடக மாநிலத்தில் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் இன்னும் அவர்கள் அளவுக்குக்கூட இல்லாமல், 15 சதவீதத்தில்தான் நின்று கொண்டிருக்கிறோம்.

ஆந்திராவை எடுத்துக்கொண்டால், தனி நபர் வாகனத்தின் மொத்த மதிப்பில் 9 சதவீதமும், நிறுவனங்கள் சார்பாக வருகின்ற வாகனங்களுக்கு 12 சதவீதமும், அதற்கு மேல் தனி நபர் வாகனங்களின் மதிப்பில் 12 சதவீதமும் என்று, ஒவ்வொரு கட்டம் கட்டமாக வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இது குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-50

(ஔ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2010), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS